# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2128/9 - 2019 ජූනි මස 18 වැනි අඟහරුවාදා - 2019.06.18

*2128/9 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. வ. பி 24/51 (V)*

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 164 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 237 ஆம் பிரிவின்கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள்
அமைச்சர்

கொழும்பு,
2019, யூன் 17.

ஒழுங்குவிதிகள்

இரண்டாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆந் திகதிய 1940/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, மோட்டார் வாகன (சைகைகள், சமிக்ஞைகள், அடையாளங்கள் மற்றும் வீதிக் குறியீடுகள்) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :-

(1) அதன் 13 ஆம் ஒழுங்குவிதியின் 8 ஆம் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும்:-

"(8) வசு வண்டி ஒன்றிற்கான நிறுத்தி வைக்கும் இடம் ஒன்றைக் குறித்துக் காட்டுகின்ற OSD-06 சைகை ஆனது ஏதேனும் வீதியில் வைக்கப்பட்டுள்ளவிடத்து, 19 ஆம் ஒழுங்குவிதியின் (10) ஆம் பந்திக்கும் 32 ஆம் ஒழுங்குவிதியின் (3) ஆம் பந்திக்கும் ஒத்திசைய நிற்பாட்டுவதற்குத் தேவைப்படுத்துகின்றதான அவ்வாகனங்கள் தவிர, வாகனம் எதுவும்




இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

அத்தகைய சைகையிலிருந்து முப்பது (30) மீற்றர்கள் தூரத்தினுள் நிறுத்தி வைக்கப்படுதலோ அல்லது தரித்து நிற்கப்படுதலோ ஆகாது; ஆயினும் மேற்சொல்லப்பட்ட (30) மீற்றர்கள் தூரமானது இவ்வீதிக் குறியீடு அப்போதைக்குப் புலப்படக்கூடியதாக இருக்கின்றவிடத்து, வீதிக் குறியீடுகள் RM-27 முதல் RM-32 வரையானவற்றில் மிகவும் நெருங்கிய இடத்தில் இருந்துகணிப்பிடப்படுதல் வேண்டும்.

(9) நீண்டதூர சேவை வசு வண்டி ஒன்றுக்கான வரையறுக்கப்பட்ட நிறுத்தி வைக்கும் இடம் ஒன்றையும் வசு வண்டி ஒன்றுக்கான நிறுத்தி வைக்கும் இடம் ஒன்றையும் குறித்துக்காட்டுகின்ற OSD-26 சைகை ஆனது ஏதேனும் வீதியில் வைக்கப்பட்டுள்ளவிடத்து, 19 ஆம் ஒழுங்குவிதியின் (10) ஆம் பந்திக்கும் 32 ஆம் ஒழுங்குவிதியின் (3) ஆம் பந்திக்கும் ஒத்திசைய நிற்பாட்டுவதற்குத் தேவைப்படுத்துகின்றதான அவ்வாகனங்கள் தவிர, வாகனம் எதுவும் அத்தகைய சைகையிலிருந்து முப்பது (30) மீற்றர்கள் தூரம் ஒன்றினுள் நிறுத்தி வைக்கப்படுதலோ அல்லது தரித்து நிற்கப்படுதலோ ஆகாது; ஆயினும் மேற்சொல்லப்பட்ட (30) மீற்றர்கள் தூரமானது இவ்வீதிக் குறியீடு அப்போதைக்குப் புலப்படக்கூடியதாக இருக்கின்றவிடத்து வீதிக் குறியீடுகள் RM-27 முதல் RM-32 வரையானவற்றில் மிகவும் நெருங்கிய இடத்தில் இருந்துகணிப்பிடப்படுதல் வேண்டும்."

(2) அதன் III ஆம் அட்டவணையில் OSD-25 என்னும் சைகையினை உடனடுத்துப் பின்வரும் சைகையினை உட்புகுத்துவதன் மூலம்:-

| | | | |
|---|---|---|---|
| O.S.D – 26 | நீண்ட தூர சேவை வசு வண்டிக்கான வரையறுக்கப்பட்ட நிற்பாட்டும் இடம் மற்றும் வசு வண்டி நிற்பாட்டும் இடம். |  | OSD –06 சைகையினால் வெளிப்படுத்தப்பட்ட வசு வண்டிகளின் நிறுத்துகைக்கான இடமொன்றை உள்ளடக்குகின்றதான நீண்ட தூர சேவை வசு வண்டிகளின் வரையறுக்கப்பட்ட நிறுத்துகைகளிற்கான இடமொன்றைக் குறித்துக் காட்டுதல். |

07-34